தமிழகத்தில் இதுவரை ஏறத்தாழ 4 லட்சம் பேருக்கு கரோனா பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. இதன் காரணமாக மாநிலம் முழுவதும் காய்ச்சல், சளி அறிகுறிகள் உள்ள அனைவரும் தனிமைப்படுத்தப்பட்டு வருகின்றனர். அதேபோன்று காய்ச்சல் பாதிப்பு உள்ளவர்களுக்கு கட்டாயமாக கரோனா பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்த சூழலில் அண்மைக்காலமாக மாநிலத்தில் ஆங்காங்கே மழை பெய்து வருவதால், கொசுக்களின் உற்பத்தி அதிகரித்து வருகிறது.

அதன் விளைவாக டெங்கு பாதிப்பு பரவலாக உருவாகியுள்ளது. தமிழகம் முழுவதும் நூற்றுக்கும் மேற்பட்டோர் டெங்குவால் பாதிக்கப்பட்டு மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கரோனாவுக்கும், டெங்கு காய்ச்சலுக்கும் ஏறத்தாழ ஒரே மாதிரியான அறிகுறிகள் இருப்பதால், அவர்களை அடையாளம் காண இயலாமல் இரண்டு பரிசோதனைகளையும் மேற்கொள்ள வேண்டிய நிலை இருப்பதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர். அதுமட்டுமல்லாது, காய்ச்சலுடன் வரும் நோயாளியை முதலில் கரோனா பரிசோதனைக்குட்படுத்தி அதன் முடிவுகளுக்காக காத்திருக்க வேண்டிய நிலை இருப்பதால், சம்பந்தப்பட்ட நோயாளிக்கு டெங்கு காய்ச்சல் இருப்பதைக் கண்டறிவதற்கு குறைந்தது மூன்று நாள்களாகிறது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், டெங்கு ஒழிப்புப் பணிகளை முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து, சுகாதாரத்துறை செயலர் அதிகாரிகள் கூறியதாவது:

டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கையை உடனடியாக மேற்கொள்ளுமாறு அனைத்து மாவட்ட நிர்வாகங்களுக்கும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கவும், காய்ச்சல் முகாம்களில் கரோனாவுடன், டெங்கு, டைபாய்டு உள்ளிட்ட காய்ச்சல் கண்டறியப்பட்டால் உடனடியாக தெரிவிக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கரோனா தடுப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள களப்பணியாளர்களை, டெங்கு தடுப்பு பணிகளிலும் கவனம் செலுத்த உத்தரவிடப்பட்டுள்ளது.

டெங்கு காய்ச்சலுக்கு சிகிச்சையளிக்கத் தேவையான மருந்துகளும், வசதிகளும் அரசிடம் உள்ளன. டெங்கு கொசுக்கள் பரவாத வண்ணம் பொதுமக்கள் விழிப்புணர்வுடன் செயல்பட வேண்டும் என்று அவர்கள் தெரிவித்தனர்.

# சென்னையில் கட்டுப்பாடு பகுதிகள் 45-ஆக அதிகரிப்பு

**சென்னை, ஆக. 29:** பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உள்பட்ட பகுதிகளில் ஆகஸ்ட் மாத தொடக்கத்தில் 23-ஆக இருந்த கரோனா கட்டுப்பாடு பகுதிகள் தற்போது 45-ஆக அதிகரித்துள்ளது.

சென்னை மாநகராட்சிக்கு உள்பட்ட 15 மண்டலங்களில் கரோனா பரவலைக் குறைக்கும் வகையில் நோய்த் தொற்று உறுதி செய்யப்பட்டவர்கள் வசிக்கும் பகுதிக்குள் பொதுமக்கள் நுழைவதைத் தடுக்கும் வகையிலும், தொற்றுள்ளவர்கள் வெளியே வருவதைத் தவிர்க்கும் வகையிலும் அவை கட்டுப்பாடு பகுதிகளாக அறிவிக்கப்படுகின்றன.

சென்னை மாநகராட்சிப் பகுதியில் மார்ச் மாதம் முதல் ஜூலை மாதம் வரையில் நோய்த் தொற்று அதிகமாக இருந்ததால், கட்டுப்பாடு பகுதிகளும் 600-ஐ எட்டியது.

பரிசோதனையை அதிகரித்தது மற்றும் நோய்த் தொற்றுள்ளவர்களைத் தனிமைப்படுத்துதல், தொடர் சிகிச்சை ஆகிய நடவடிக்கை காரணமாக சென்னையில் கரோனா பாதிப்பு நாளுக்கு நாள் குறைந்து வருகிறது. இதனால் கட்டுப்பாடு பகுதிகளும் குறைந்தன.

ஜூலை 1-ஆம் தேதி 143-ஆக இருந்த கட்டுப்பாடு பகுதிகள் கடந்த ஜூலை 18-ஆம் தேதி 196-ஆகவும் குறைந்தது. மாநகராட்சி எடுத்த நடவடிக்கைகளால், கட்டுப்பாடு பகுதிகள் கடந்த 27-ஆம் தேதி 54-ஆகவும் குறைந்தது.

இந்நிலையில், தற்போது சென்னையில் பரிசோதனைகளை அதிகப்படுத்தி உள்ளதால், நோய்த் தொற்றுள்ளவர்களின் எண்ணிக்கையும் உயர்ந்து வருகிறது. இதனால், ஆகஸ்ட் தொடக்கத்தில் 23-ஆக இருந்த கட்டுப்பாடு பகுதிகள் சனிக்கிழமை நிலவரப்படி, 45-ஆக உயர்ந்துள்ளது.

**கட்டுப்பாடு பகுதிகள் விவரம்:**

**மண்டலம் பகுதிகள்**

அண்ணா நகர் ............12
வளசரவாக்கம் ...........10
அடையாறு ................10
கோடம்பாக்கம்.............8
சோழிங்கநல்லூர்.......... 3
ஆலந்தூர் ....................1
பெருங்குடி ..................1

### 1,285 பேருக்கு தொற்று

சனிக்கிழமை (ஆக. 29) 1,285 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டதை அடுத்து மொத்த பாதிப்பு எண்ணிக்கை 1,33,173-ஆக அதிகரித்துள்ளது. தொற்று உறுதி செய்யப்பட்டவர்களில் 1,16,808 பேர் பாதிப்பிலிருந்து மீண்டு வீடு திரும்பி உள்ளனர். 13,653 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். சென்னையில் கரோனா பாதிப்பால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை சனிக்கிழமை 2,712- ஆக அதிகரித்துள்ளது.



### வந்ததே ஓணம்...

ஓணம் பண்டிகையை முன்னிட்டு திருவொற்றியூரில் கைரளி அமைப்பினர் சனிக்கிழமை ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சியில் முகக்கவசம், கிருமி நாசினி வழங்கிய மகாபலி சக்கரவர்த்தி போல் வேடமணிந்தவர்.

# இந்து சமய அறநிலையத் துறை ஆணையராக எஸ்.பிரபாகர் நியமனம்

**சென்னை, ஆக. 29:** இந்து சமய அறநிலையத் துறை ஆணையராக எஸ். பிரபாகர் நியமிக்கப்பட்டுள்ளார். மேலும், கோவை மாநகராட்சி ஆணையாளரும் மாற்றம் செய்யப்பட்டுள்ளார். இதற்கான உத்தரவை தமிழக அரசின் தலைமைச் செயலாளர் க.சண்முகம் சனிக்கிழமை பிறப்பித்தார்.

அதன் விவரம் (அதிகாரிகள் முன்பு வகித்த பதவி அடைப்புக் குறிக்குள்):-

**எஸ்.பிரபாகர்** – இந்து சமய அறநிலையத் துறை ஆணையாளர் (கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர்)

**வி.ஜெயசந்திர பானு ரெட்டி** – கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் (பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் செயல் அதிகாரி)

**ஜி.லலிதா** – ஒருங்கிணைந்த கல்வித் திட்ட இயக்குநர் (ஆசிரியர் தேர்வாணையத் தலைவர்)

**ஸ்ரவண் குமார் ஜடாவத்** – வேளாண்மைத் துறை துணைச் செயலாளர் (கோவை மாநகராட்சி ஆணையாளர்)

**பி.குமாரவேல் பாண்டியன்** – கோவை மாநகராட்சி ஆணையாளர் (பெருநகர சென்னை மாநகராட்சி துணை ஆணையாளர் -பணிகள்).

கரோனா எதிரொலி

# மருத்துவமனைகளில் ஆக்சிஜன் 5 மடங்கு கூடுதலாக கொள்முதல்

**சென்னை, ஆக. 29:** கரோனா பாதிப்பு தீவிரமடைந்து வருவதால் தமிழக அரசு மருத்துவமனைகளில் கடந்த நான்கு மாதங்களில் மட்டும் ஆக்சிஜன் வசதிகளுக்காக வழக்கத்தைவிட 5 மடங்கு கூடுதலான தொகை செலவிடப்பட்டுள்ளது. அதிக எண்ணிக்கையிலான நோயாளிகள் மூச்சுத் திணறல் பாதிப்புடன் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படுவதே அதற்கு காரணமாகக் கூறப்படுகிறது.

இதுகுறித்து சுகாதாரத் துறை அதிகாரிகள் கூறியதாவது:

தமிழகத்தில் 4 லட்சத்துக்கும் மேற்பட்டோருக்கு நோய்த் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. கரோனா பாதித்தவர்களில் 50 சதவீதத்துக்கும் அதிகமானோருக்கு நுரையீரலில் பாதிப்பு ஏற்படுகிறது. அது தீவிரமடையும் பட்சத்தில் மூச்சுத்திணறல் ஏற்படுவதுடன் ரத்த ஆக்சிஜன் அளவு குறைகிறது. இதன் விளைவாக அவர்களுக்கு ஆக்சிஜன் உதவியுடன் சிகிச்சையளிக்க வேண்டியுள்ளது.

தீவிர பாதிப்பு உள்ளவர்களுக்கு வெண்டிலேட்டர் மூலம் செயற்கை சுவாசம் அளிக்கப்பட்டு வருகிறது. தமிழகம் முழுவதும் 13 ஆயிரத்துக்கும் அதிகமான படுக்கைகள் செயற்கை சுவாசக் கட்டமைப்பு வசதிகளுடன் இருக்கின்றன.

கடந்த நான்கு மாதங்களில் மட்டும் ரூ.35 கோடியை சுகாதாரத் துறை செலவழித்துள்ளது. கடந்த ஆண்டில் மொத்தமாகவே ரூ.18 கோடி மட்டுமே ஆக்சிஜன் தேவைக்காக செலவானது. மக்களின் நலன் கருதி செலவினங்களைக் கருத்தில் கொள்ளாமல் உடனடியாக அனைத்து வசதிகளையும் சுகாதாரத் துறை மேற்கொண்டு வருகிறது என்று அவர்கள் தெரிவித்தனர்.

# ஓணம் பண்டிகை: சிறப்புப் பேருந்துகள் இயக்கம்

**சென்னை, ஆக. 29:** ஓணம் பண்டிகை கொண்டாடுவதற்காக கேரள மாநிலத்துக்குச் சென்றவர்கள், சென்னை திரும்புவதற்காக சிறப்புப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

இது தொடர்பாக கேரள மாநிலம் சாலைப் போக்குவரத்துக் கழக அதிகாரிகள் கூறியதாவது: ஓணம் பண்டிகையை முன்னிட்டு, சென்னையில் இருந்து சிறப்புப் பேருந்துகள் இயக்கப்பட்டன. தற்போது ஓணம் பண்டிகை முடிந்து, சென்னை திரும்புவோருக்காக செப்.1 முதல் 6-ஆம் தேதி வரை, திருவனந்தபுரத்தில் இருந்து சென்னை வரை, சிறப்புப் பேருந்துகள் இயக்கப்படவுள்ளன. நாள் ஒன்றுக்கு ஒரு பேருந்து வீதம், மாலை 5 மணிக்குத் திருவனந்தபுரத்தில் இருந்து புறப்படும் சொகுசு மிதவைப் பேருந்து, மறுநாள் காலை 9 மணிக்குச் சென்னை வந்தடையும். இந்தத் தேதிகளில், சென்னையில் இருந்து திருவனந்தபுரத்துக்கும் பேருந்து இயக்கப்படுகிறது. இந்தப் பேருந்தானது, பாலக்காடு, திருச்சூர், எர்ணாகுளம் வழியாகச் செல்லும். இதற்கான கட்டணமாக ரூ.1330 நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

இதில் பயணிக்க இ பாஸ் கட்டாயம். 39 பயணிகள் மட்டுமே அனுமதிக்கப்படுவர். சென்னையில் இருந்து கோயம்புத்தூருக்கும் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. கேரள அரசு இயக்கும் சிறப்புப் பேருந்துகளில் பயணம் செய்ய விரும்புவோர், www.keralartc.com என்னும் இணையதளத்தை அணுகலாம் என்று அவர்கள் தெரிவித்தனர்.


**பைமெட்டல் பேரிங்ஸ் லிமிடெட்**
CIN : L29130TN1961PLC004466
(அமால்கமேஷன்ஸ் குழுமத்தின் ஓர் அங்கம்)
பதிவு அலுவலகம் : ஹுஸூர் கார்டன்ஸ், செம்பியம், சென்னை – 600 011.
இணையம் : www.bimite.co.in மின்னஞ்சல் : vidhyashankar@bimite.co.in
தொலைபேசி : (0422) – 2221159 செல்: 97902 46890

அறிவிப்பு

**ஜூன் 30, 2020** உடன் முடிவடைந்த காலாண்டிற்கான தணிக்கை செய்யப்படாத நிதி நிலை முடிவுகளை பரிசீலிப்பதற்காக, ஏற்றுக் கொள்வதற்காக மற்றும் பதிவில் எடுத்துக் கொள்வதற்காக நிறுவனத்தின் இயக்குனர்கள் குழுவின் கூட்டமானது **07.09.2020, திங்கட்கிழமை** அன்று நடைபெறும் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

பைமெட்டல் பேரிங்ஸ் லிமிடெட்டிற்காக,
**கே. வித்யா சங்கர்**
28.08.2020 நிறுவனச் செயலாளர்



வெள்ளிதோறும்
தினமணியுடன்...
வெள்ளி மணி
❖ ஆன்மீகச் சிலிர்ப்பு
❖ ஜோதிடச் சிறப்பு
இரண்டும் இணைந்த வண்ண இணைப்பு



## தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம்

19-ஏ. ருக்குமணி இலட்சுமிபதி சாலை, எழும்பூர், சென்னை - 8.
CIN U74999TN1971SGC005967

**குறுகிய கால மறு ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை எண்.என்ஜடி. 50 /ஒ.எண். 54 /2020-21. நாள். 28.08.2020**

தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் சார்பாக மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் **ஒரு உறை முறையில்** பின் வரும் பணிக்கு வகுப்பு I மாநில அளவில் அரசுத் துறைகள் / நிறுவனங்கள் மற்றும் அரசு சார்பு நிறுவனங்களில் பதிவு பெற்ற கட்டுமான பணிகளில் ஒத்த பணிகளில் அனுபவம் பெற்ற ஒப்பந்தக்காரர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்க கடைசி நாள் **09.09.2020** மாலை 3.00 மணி. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் அன்றே பிற்பகல் **3.30** மணிக்கு திறக்கப்படும்.

| பணியின் பெயர் | திட்ட மதிப்பீடு (ரூ இலட்சத்தில்) | முன் வைப்புத் தொகை ரூ |
|---|---|---|
| வல்லம்வடகால் சிப்காட் தொழில் பூங்கா மற்றும் செய்யார் தொழில் வளாகத்தில் முட்செடிகளை அகற்றும் பணி, திறந்தவெளி பகுதிகளில் (OSR) வலுவூட்டும் சிமெண்ட் கான்கிரீட் (RCC) கம்பங்களுடன் முள் வேலி அமைத்தல். | ரூ.173.60/– | ரூ.96,800/–* |

*கேட்பு வரைவோலை சிப்காட், சென்னை–8 நிறுவனத்தின் பெயரில் சென்னையில் மாற்றத்தக்க வகையில் எடுக்கப்பட வேண்டும். வரைவோலை அந்த பெயரிலேயே சமர்ப்பிக்க வேண்டும்.

ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்ட இணைய தளம் மூலமாக இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். இணையதள முகவரி www.tenders.tn.gov.in

செ.ம.தொ.இ/3248/ஒப்பந்தப்புள்ளி/2020 **கண்காணிப்புப் பொறியாளர்**



## தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை இயக்ககம்

எழும்பூர், சென்னை - 600 008
**திறந்த ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை 2 / 2020**

நன்மதிப்புள்ள உற்பத்தியாளர்கள் / உற்பத்தியாளர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட அங்கீகாரம் பெற்ற பகிர்வாளர்கள் / வணிகர்களிடமிருந்து கீழே குறிப்பிட்டுள்ள இனங்கள் கொள்முதல் செய்ய ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

**"ஒப்பந்தப்புள்ளியில் தெரிவிக்கப்பட்டுள் தர நிர்ணய வரையறைகளின்படி 5 எண்ணிக்கை வாட்டர் மிஸ்ட் தொழில்நுட்ப கருவிகள், 6 எண்ணிக்கை நீர் அகற்றும் பம்புகள் (மணிக்கு உத்தேசமாக 2.5 இலட்சம் நீர் அகற்றும் திறன் கொண்ட டீசலினால் இயக்கத்தக்கது), 20 எண்ணிக்கை நீண்ட ஆழம் செல்ல உதவும் SCUBA உடை, 20 எண்ணிக்கை ஆழ்துளை கிணறு மீட்பு உபகரணம் மற்றும் 300 எண்ணிக்கை டார்ச் லைட்டுகள்**

ஒப்பந்தப்புள்ளி படிவ விலை விவரம் (Tender Fees) பிணை வைப்பு தொகை (EMD) மற்றும் தர நிர்ணய வரையறைகள் (Specifications) மற்றும் இதர விவரங்கள் ஒப்பந்தப்புள்ளி படிவத்தில் அளிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளி படிவத்தினை **"https://www.tnfrs.tn.nic.in"** என்ற இணையதளத்தில் பார்வையிட்டு இணைய தளத்திலிருந்து இலவசமாக (download free of cost) பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

| | | |
|---|---|---|
| அ. | ஒப்பந்தப்புள்ளி படிவம் பெறுவதற்கான கடைசி தேதி மற்றும் நேரம் | **21.09.2020 - 12.00** மணி |
| ஆ. | பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளி படிவம் சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி மற்றும் நேரம் | **21.09.2020 - 14.00** மணி |
| இ. | அனைத்து ஒப்பந்தப்புள்ளியின் தொழில் நுணுக்க மற்றும் வர்த்தக விவரப்பட்டியல் திறக்கப்படும் தேதி | **21.09.2020 - 14.30** மணி |

இடம் : சென்னை – 8
நாள் : 28.8.2020
ஒப்பந்தப்புள்ளி வரவேற்கும் அலுவலர்
**தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை**
செமதொஇ / 3253 / ஒப்பந்தப்புள்ளி / 2020 தொலைபேசி எண் : 044-28554309



## தெற்கு ரயில்வே

**திருச்சிராப்பள்ளி கோட்டம்,**
**மின் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்: TPJ / 07 of 2020**
**தேதி: 26.08.2020**

கோட்ட ரயில்வே மேலாளர் / பணிகள் பிரிவு / திருச்சிராப்பள்ளி கோட்டம், திருச்சிராப்பள்ளி - 1 அவர்கள், இந்திய குடியரசுத் தலைவர் சார்பாக, எமது மின் ஒப்பந்தப்புள்ளி போர்ட்டலான www.ireps.gov.in-ல் கொடுக்கப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பின் படி, பின்வரும் பணிகளுக்கு **ஆன்லைன்** ஒப்பந்தப்புள்ளிகளை வரவேற்கிறார். திருச்சிராப்பள்ளி கோட்டத்தில் பணிகளுக்கான மின் ஒப்பந்தப்புள்ளிக்கு விண்ணப்பிக்க விரும்பும் ஒப்பந்தப்புள்ளியர்(கள்) / ஒப்பந்ததாரர்(கள்), மின் ஒப்பந்தப்புள்ளி போர்ட்டலான www.ireps.gov.in-ல் பதிவு செய்திருக்க வேண்டும்; மேலும் ஆன்லைன் ஒப்பந்தப்புள்ளிகள் மட்டுமே ஏற்கப்படும். மின் ஒப்பந்தப்புள்ளி முறையில் பங்கேற்க, டிஜிட்டல் கையொப்ப சான்றிதழ்கள் பெற்றிருக்க வேண்டியது ஒப்பந்தப்புள்ளியர்(கள்) / ஒப்பந்ததாரர்(கள்) பொறுப்பு.

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளி எண். | பணிப் பெயர் |
|---|---|---|
| 1 | TPJ-07-2020-01 | விழுப்புரம் - புதுச்சேரி பிரிவு : பாலம் எண்கள்: 97, 98 மற்றும் 107-களில், பிரீகாஸ்ட் RCC பாக்ஸ் கொண்டு, பாலங்களை மறுகட்டுமானம் செய்தல் |
| 2 | TPJ-07-2020-02 | தஞ்சாவூர் - காரைக்கால் பிரிவு : முதுநிலைப் பிரிவுப் பொறியாளர் / நிரந்தர வழி / A-திருவாரூர் பிரிவில், 4.40 கிமீ நீளத்திற்கு, கொரடாச்சேரி மற்றும் குழிக்கரை நிலையங்களுக்கு இடையில், கிமீ 43.000 முதல் கிமீ 47.400 வரை, moorum பிளாங்கெட்டிங் ஏற்படுத்துவதன் மூலம், Through ஃபார்மேஷன் டிரீட்மென்ட். |
| 3 | TPJ-07-2020-03 | திருச்சிராப்பள்ளி சந்திப்பு - கோச்சிங் டிப்போவில், தானியங்கும் கோச் கழுவும் (வாஷிங்) ஆலையை ஏற்படுத்துதல் (சிவில் பொறியியல் பகுதி மட்டும்) |
| 4 | TPJ-07-2020-04 | திருச்சிராப்பள்ளி கோட்டம் : முதுநிலைப் பிரிவுப் பொறியாளர்/ நிரந்தர வழி / அரியலூர், திருச்சிராப்பள்ளி மற்றும் மயிலாடுதுறையில், கருவிகள் (accessories) உட்பட, தானியங்கி Thimble (டிம்பிள்) தொழில்நுட்பத்துடன் கூடிய, வெல்டிங் பகுதிகளை வழங்குதல் |
| 5 | TPJ-07-2020-05 | விழுப்புரம் சந்திப்பு - முதுநிலைப் பிரிவுப் பொறியாளர்/ பணிகள்/ விழுப்புரம் எல்லை வரம்பில், (i) தண்ணீர் வழங்குவதற்கான கட்டுப்பாட்டு வால்வுகளை ஒழுங்குபடுத்துதல்; மற்றும் (ii) OHT, GLR, PVC ஸ்டேஜ் டேங்குகள், செப்டிக் டேங்குகளை காலாகாலம் துப்புரவு செய்தல் மற்றும் பராமரித்தல் |
| 6 | TPJ-07-2020-06 | விழுப்புரம் - திருச்சிராப்பள்ளி கார்டு லைன் பிரிவு : முதுநிலைப் பிரிவுப் பொறியாளர்/ பணிகள்/ லால்குடி எல்லை வரம்பில், (i) தண்ணீர் வழங்குவதற்கான கட்டுப்பாட்டு வால்வுகளை ஒழுங்குபடுத்துதல்; மற்றும் (ii) GLR, OHT, PVC ஸ்டேஜ் டேங்குகள், செப்டிக் டேங்குகள், நிலத்தடி கழிவுநீர் அமைப்புகளை (Sewage Systems), காலாகாலம் துப்புரவு செய்தல் மற்றும் பராமரித்தல் |
| 7 | TPJ-07-2020-07 | முதுநிலைப் பிரிவுப் பொறியாளர்/ நிரந்தர வழி/ கடலூர் போர்ட் சந்திப்பு, மயிலாடுதுறை மற்றும் B-திருவாரூர் பிரிவுகளில், தற்போதைய பாலத்தின் ஸ்லீப்பர்கள், பாலத்தின் அப்ரோச் ஸ்லீப்பர்கள் மற்றும் லெவல் கிராசிங் ஸ்லீப்பர்களை புதுப்பித்தல். |
| 8 | TPJ-07-2020-08 | திருச்சிராப்பள்ளி கோட்டத்தில், 24 இடங்களின், பல்வேறு சாலை கீழ் பாலங்கள் மற்றும் சுரங்கவழிகளில், உயர கேஜ் (Height Gauge) ஏற்படுத்துதல் |

| வ. எண் | பணியின் சராசரி மதிப்பு லட்சத்தில் ₹ | முன்வைப்புத் தொகை ₹ | பணி நிறைவேற்றும் காலம் |
|---|---|---|---|
| 1 | 179.86 | 239900 | 5 மாதங்கள் |
| 2 | 379.86 | 339900 | 5 மாதங்கள் |
| 3 | 12.05 | 24100 | 4 மாதங்கள் |
| 4 | 163.31 | 231700 | 9 மாதங்கள் |
| 5 | 36.46 | 72900 | 24 மாதங்கள் |
| 6 | 27.31 | 54600 | 24 மாதங்கள் |
| 7 | 47.75 | 95500 | 6 மாதங்கள் |
| 8 | 165.72 | 232900 | 6 மாதங்கள் |

**வரிசை எண் : 01 முதல் 08 வரை : ஒப்பந்தப்புள்ளி மூடும் தேதி மற்றும் நேரம் : 22.09.2020 அன்று 15.00 மணிக்கு.**

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளின் முழு விவரங்களும் www.ireps.gov.in என்ற மின் போர்ட்டலில் கொடுக்கப்பட்டுள்ளன. ஏலப்புள்ளி (பிட்) சமர்ப்பித்தல் விவரங்களுக்கு இணையதள போர்ட்டலான www.ireps.gov.in-ஐ பார்வையிடலாம்.

விலை மாறுபாட்டு விகிதமானது, ₹ 5 கோடி ரூபாய்க்கு மேற்பட்ட ஒப்பந்த உடன்பாட்டு மதிப்புள்ள பணிகளுக்கே பொருந்தும்; ஆண்டு பராமரிப்பு ஒப்பந்தம் (AMC) அல்லது மண்டல ஒப்பந்தத்திற்கான இத்தகைய பணிகளுக்குப் பொருந்தாது.

மேற்கண்ட போர்ட்டல் மூலம் வெளியிடப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிக்கான ஆன்லைன் ஏலப்புள்ளிகளுக்கு (பிட்ஸ்), டிஜிட்டல் முறையில் கையொப்பம் தேவைப்படும்.

**குறிப்பு:**

1. இணையதளத்தில் இது தொடர்பாக ஏதாவது திருத்தம் அல்லது மாற்றம் செய்யப்பட்டு, ஏதாவது திருத்த அறிவிப்பு வெளியாகிறதா என்பதை தொடர்ந்து கவனித்து வருவது ஒப்பந்தப்புள்ளியர்களின் பொறுப்பு. இதே நடைமுறைகள் ஒப்பந்தப்புள்ளியை சமர்ப்பிக்கும் போது கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.
2. IREPS இல் உங்களது GST விவரங்களைப் பதிவுசெய்வதற்கான வசதி, உங்களது IREPS முகப்புப் பக்கத்தில் வழங்கப்பட்டுள்ளது. தயவுசெய்து பதிவுசெய்து கொள்ளவும்.
3. ஒப்பந்ததாரர்களால், ஏலப்புள்ளியுடன் (பிட்) கூடவே சமர்ப்பிக்கப்பட்ட அவர்களது அனைத்து அறிக்கைகள் / ஆவணங்கள் உண்மை மற்றும் நம்பகத்தன்மையானது என்பதைக் குறிப்பிடும் சான்றிதழின் ஒரு நகல் சமர்ப்பிக்கப்பட வேண்டும். ஏலப்புள்ளியரால் (பிட்டர்) சமர்ப்பிக்கப்பட வேண்டிய சான்றிதழின் தரநிலை வடிவமானது, பின்னிணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட சான்றிதழ் ஏலப்புள்ளியரால் (பிட்டர்) சமர்ப்பிக்கப்பட வில்லையெனில், அவருடைய / அவர்களுடைய ஏலப்புள்ளி (பிட்) மொத்தமாக நிராகரிக்கப்பட ஏதுவாகும். ஒப்பந்ததாரர் அடையாளம், தகுதிநிலை மற்றும் சான்றுரைக்கும் ஆவணங்கள், அவரால்/ அவர்களால் உரிய முறையில் சுய சான்றிடப்பட்டு, சமர்ப்பிக்கப்படும் ஒப்பந்தப்புள்ளி ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிக்கான அளவுகோல்களை நிறைவேற்றி தகுதிபெறுவது கட்டாயப் பொறுப்பு ஆகும்.

**கோட்ட ரயில்வே மேலாளர், பணிகள், திருச்சிராப்பள்ளி**

Follow us on : twitter.com/GMSRailway



## TNPL தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம்

மொண்டிப்பட்டி, மணப்பாறை தாலுக்கா, திருச்சி மாவட்டம் - 621 306.
தொலைபேசி : 04332-261600, மின்அஞ்சல் : tos.u2@tnpl.co.in

**ஒப்பந்தப்புள்ளி அழைப்பு அறிவிப்பு**

| ஒப்பந்தப்புள்ளி எண் | வேலையின் விவரம் | ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்கும் நாள் |
|---|---|---|
| 202123 000766 | திருச்சி மாவட்டம், TNPL Unit-II-ல் நிலக்கரி கையாளும் அமைப்பை பராமரித்தல் | 18.09.2020 |
| 202123 000798 | திருச்சி மாவட்டம், TNPL Unit-II-ல் மூலப்பொருட்களை உட்செலுத்துதல் மற்றும் காகித துண்டுகளை (WPP) இடம் மாற்றம் செய்தல். | 17.09.2020 |
| 202123 000797 | திருச்சி மாவட்டம், TNPL Unit-II ஆலை (Entire Mill wide area) முழுவதும் தூய்மையாக்கும் பணி மேற்கொள்ளுதல். | 16.09.2020 |

முழுமையான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள், ஒப்பந்தப்புள்ளி கட்டணம் மற்றும் பிணைவைப்புத் தொகை ஆகிய அனைத்து இதர விவரங்களையும் www.tnpl.com / www.tenders.tn.gov.in ஆகிய இணையதளங்களிலிருந்து பதிவிறக்கம் செய்து தெரிந்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ/3242/ஒப்பந்தப்புள்ளி/2020 நாட்டின் இயற்கைவளம் போற்றும் காகிதம் செய்வோம்



தமிழ்நாடு அரசு
## பம்மல் நகராட்சி
(செங்கல்பட்டு மாவட்டம்)

இளம் பொறியியல் பட்டதாரிகளுக்கு பம்மல் நகராட்சியில்
**INTERNSHIP TRAINING**
பயிற்சி பெற ஒரு அரிய வாய்ப்பு

**2018–19ஆம் ஆண்டிற்கு பின் பட்ட படிப்பு முடித்த மாணவர்கள் www.internship.aicte-india.org எனும் இணையதளத்தில் 07.09.2020க்குள் விண்ணப்பிக்கலாம்.**

மேலும் விபரங்களுக்கு
பொறியியல் பிரிவு, பம்மல் நகராட்சியில் தொடர்பு கொள்ளவும்.
அலுவலக தொலைபேசி எண்.044–22483110
E-mail: commr.pammal@tn.gov.in

(ந.க.எண்.1030/2020/இ1)
செ.ம.தொ.இ/730/வரைகலை/2020
ஆணையாளர்
பம்மல் நகராட்சி



THE NEW INDIAN EXPRESS

requires

EXECUTIVE - DIGITAL AD OPERATIONS

at CHENNAI

**Qualification & Experience:**
Graduates with operational knowledge in DFP/GAM and Experience in FLASH/ JAVASCRIPT/HTML.

If you are a dynamic Ad Operations specialist with two or three years experience in Digital platform, you could be the right person.

Prior exposure in Digital Ad Operation with Publishers is a must.

Salary will not be a constraint for deserving candidates.

Interested candidates may mail their latest resume to : ravi.r@newindianexpress.com or send their resume to :

**Chief Manager**
**(Editorial HR & Administration)**
**Express Publications (Madurai) Private Limited**
29, II Main Road,
Ambattur Industrial Estate
Chennai 600 058.

THE NEW INDIAN EXPRESS GROUP

EXECUTIVE – DIGITAL AD OPERATIONS



बैंक ऑफ़ बड़ौदा
Bank of Baroda
विजया बैंक VIJAYA BANK | देना बैंक DENA BANK

**மண்டல ஒடுக்கப்பட்ட சொத்துக்கள் மீட்பு கிளை:**
**1-வது தளம், எண்.74, தியாகராய ரோடு, தி நகர், சென்னை-600017, Ph : 2815 2104**

**அசையா சொத்துக்களின் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு "APPENDIX- IV-A [See proviso to Rule 6 (2) & 8 (6)]**

**கடனீட்டு சொத்துக்களை பத்திரமயமாக்குதல் மற்றும் நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 மற்றும் கடனீட்டு சொத்துக்களின் (அமலாக்க) 2002-ன் கீழ் விதிகள் 6 (2) & 8 (6)-ன் கீழ் அசையா சொத்துக்களுக்கான மின் ஏல விற்பனை அறிவிப்பு**

கீழே குறிப்பிட்டுள்ள கணக்குகளிடம் உள்ள நிலுவை தொகையை வசூலிப்பதற்காக கடன் அளித்தவரான பேங்க் ஆப் பரோடா வங்கியின் அதிகாரப்பூர்வ அதிகாரி அவர்களால் கடன் அளித்த வங்கியிடம் அடமான செய்யப்பட்ட கீழே குறிப்பிட்டுள்ள அசையா சொத்துக்களை சுவாதீனம் எடுத்துக் கொண்டு "எங்கு எப்படி உள்ளதோ அங்கு அதே நிலையில் விற்பனை செய்யப்படும்" என்று பொதுவாக பொதுமக்களுக்கும் குறிப்பாக கடன்தாரர்கள் / ஜாமீன்தாரர்கள் மற்றும் அடமானதாரர்களுக்கு இதன் மூலம் அறிவிப்பு வழங்கப்படுகிறது. கடன்தாரர்கள் / அடமானதாரர்கள் / ஜாமீன்தாரர்கள் / கடனீட்டு சொத்துக்கள் / நிலுவைத்தொகை / குறைந்தபட்ச விலை / ஏல தேதி மற்றும் நேரம், டேவணித்தொகை மற்றும் ஏல உயர்வுத்தொகை ஆகியவற்றின் விவரங்கள் கீழே கொடுக்கப்படுள்ளன.

| | |
|---|---|
| **கடன்தாரர்கள்/ஜாமீன்தாரர்கள்/ அடமானதாரர்கள் பெயர் மற்றும் முகவரி** | **M/s அஷ்வந்த் எண்டர்பிரைசஸ்,** எண்.11, K.M. ஆதம் தெரு, அண்ணா சாலை, நாகல்கேணி, சென்னை - 600 044. **திரு. G. சந்திரசேகர்,** பழைய எண்.8, புதிய எண்.158, முதல் தளம், 2வது குறுக்கு தெரு, காரப்பாக்கம் கார்டன், அடையார், சென்னை - 600 020. **திருமதி. சோபியா கரோலின்,** எண்.8, புதிய எண்.158, முதல் தளம், 2வது குறுக்கு தெரு, காரப்பாக்கம் கார்டன், அடையார், சென்னை - 600 020. **திரு. G. திருநாவுக்கரசு,** எண்.623B, III பிளாக், 5வது பிரதான சாலை, முத்தமிழ் நகர், சென்னை - 600 118. **திரு. G. பாலமுருகன்,** எண்.4, காரார் கிருஷ்ணசாமி தெரு, கொசப்பேட், வேலூர் - 632 001. |

| மொத்த நிலுவைத் தொகை | மின்ஏலத்தேதி மற்றும் நேரம் | சொத்துக்களை பார்வையிடும் தேதி மற்றும் நேரம் |
|---|---|---|
| 31.07.2020 அன்று வரை ரூ.7,75,13,026/- மேலும் வட்டி மற்றும் செலவுகள் சேர்த்து | 18.09.2020 காலை 11.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை | 11.09.2020 காலை 11.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணி வரை |

| வ. எண் / லாட் எண். | தெரிந்தவரை உள்ள வில்லங்கங்களுடன் அசையா சொத்துக்களின் விவரங்கள | குறைந்தபட்ச விலை டேவணித்தொகை ஏல உயர்வு தொகை | சுவாதீனத்தின் தன்மை |
|---|---|---|---|
| 1. | **சொத்து - 1 : வகை எண்.1 :** காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு தாலுக்கா, படூர் கிராமத்தில் சர்வே எண்.370, பட்டா எண்.516, பட்டாவின்படி சர்வே எண்.370/10A4ன்படி சீ வியூ மனைப்பிரிவில் மேற்கு பகுதியில் உள்ள மனை எண்.228ல் 2400 சதுர அடி நிலம் மற்றும் அதனுடன் இணைந்த துண்டுகளும், பகுதிகளும். எல்லைகள் : வடக்கில் : மனை எண்.225, தெற்கில் : 30 அடி சாலை, கிழக்கில் : திருமதி. சோபியா கரோலைன் அவர்களுக்கு சொந்தமான மனை எண்.228ன் மத்தியப்பகுதி , மேற்கில் : மனை எண்.227. இந்த சொத்து செங்கல்பட்டு பதிவு மாவட்டம் மற்றும் திருப்போரூர் துணை பதிவு மாவட்டத்திற்கு உட்பட்டது. **வகை எண்.2 :** காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு தாலுக்கா, படூர் கிராமத்தில் சர்வே எண்.370, பட்டா எண்.516, பட்டாவின்படி சர்வே எண்.370/10A4ன்படி சீ வியூ மனைப்பிரிவில் கிழக்கு பகுதியில் உள்ள மனை எண்.228ல் 2400 சதுர அடி நிலம் மற்றும் அதனுடன் இணைந்த துண்டுகளும், பகுதிகளும். எல்லைகள் : வடக்கில் : மனை எண்.225, தெற்கில் : 30 அடி சாலை, கிழக்கில் : மனை எண்.226, மேற்கில் : திருமதி. சோபியா கரோலைன் அவர்களுக்கு சொந்தமான மனை எண்.228ன் மத்தியப்பகுதி. இந்த சொத்து செங்கல்பட்டு பதிவு மாவட்டம் மற்றும் திருப்போரூர் துணை பதிவு மாவட்டத்திற்கு உட்பட்டது. **(திரு. G. சந்திரசேகர் அவர்கள் பெயரில் உள்ளது). வகை எண்.3 :** காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு தாலுக்கா, படூர் கிராமத்தில் சர்வே எண்.370, பட்டா எண்.516, பட்டாவின்படி சர்வே எண்.370/10A4ன்படி சீ வியூ மனைப்பிரிவில் மத்திய பகுதியில் உள்ள மனை எண்.228ல் 2400 சதுர அடி நிலம் மற்றும் அதனுடன் இணைந்த துண்டுகளும், பகுதிகளும். எல்லைகள் : வடக்கில் : மனை எண்.225, தெற்கில் : 30 அடி சாலை, கிழக்கில் : திரு. சந்திரசேகர் அவர்களுக்கு சொந்தமான மனை எண்.228, மேற்கில் : திரு. சந்திரசேகர் அவர்களுக்கு சொந்தமான மனை எண்.228. இந்த சொத்து செங்கல்பட்டு பதிவு மாவட்டம் மற்றும் திருப்போரூர் துணை பதிவு மாவட்டத்திற்கு உட்பட்டது. **(திருமதி. சோபியா கரோலைன் அவர்கள் பெயரில் உள்ளது). (வகை எண்.1 முதல் 3 வரை உள்ள சொத்துக்கள் ஒரே லாட்டாக விற்கப்படும்). இடம் : அக்ஷரேகை : 12.806200, தீர்க்க ரேகை : 80.234895** | **குறைந்தபட்ச விலை ரூ. 72,58,000/- டேவணித்தொகை ரூ. 7,25,800/- ஏல உயர்வு தொகை ரூ. 50,000/-** | அசல் சுவாதீனம் |
| 2. | **சொத்து - 2 :** திரு. திருநாவுக்காரசு அவர்கள் பெயரில் உள்ள சொத்து. மனை எண்.4/15, கவியரசு கண்ணதாசன் நகர் (மறு சர்வே எண்.87 (பகுதி)) தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், கொடுங்கையூர் கிராமம், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் புராஜெக்ட் - 1, பேஸ்-I (MUDP-1) திட்டத்தின்கீழ் ஒதுக்கப்பட்ட 2676 சதுர அடி வீட்டு மனை மற்றும் இடம். எல்லைகள் : வடக்கில் : 30 அடி சாலை, தெற்கில் : மனை எண்.4/16, 4/17, கிழக்கில் : 30 அடி சாலை, மேற்கில் : மனை எண்.4/14. இந்த சொத்தானது வடசென்னை பதிவு மாவட்டம் மற்றும் மாதாவரம் துணை பதிவு மாவட்டத்திற்கு உட்பட்டது. **இடம் : அக்ஷரேகை : 13.133805, தீர்க்க ரேகை : 80.256963** | **குறைந்தபட்ச விலை ரூ. 1,26,90,000/- டேவணித்தொகை ரூ. 12,69,900/- ஏல உயர்வு தொகை ரூ. 1,00,000/-** | ஆக்கப்பூர்வ சுவாதீனம் |

**EMD செலுத்துவதற்கான கடைசி தேதி: 16.09.2020** விற்பனைக்கான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் விவரங்களை https://www.bankofbaroda.in/e-auction.htm மற்றும் https://ibapi.in. என்ற இணையதளத்ததை லிங்க் செய்து பார்க்கவும். மேலும் பங்கு கொள்ளும் ஏலதாரர்கள் அதிகாரப்பூர்வ அதிகாரியை தொலைபேசி எண்.044-28152104ல் தொடர்பு கொள்ளலாம்.

**நாள் : 29.08.2020, இடம் : சென்னை** **அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, பேங்க் ஆஃப் பரோடா**